## சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி
## SESSION CASE NO.106/2023

2025 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 01 ஆம் நாள் செவ்வாய் கிழமை அ.சா.10 (பட்டியல் சாட்சி–10) இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மாரியப்பன் | த/பெ.: | குஞ்சு |
| கிராமம்: | பாமணி | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | துப்புரவு பணியாளர் |
| வயது: | 55 | முகவரி: | பாமணி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 01.07.2025

**முதல் விசாரணை :–**

நான் தற்போது மேற்படி விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2, அ.சா.4, அ.சா.7 ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரியை தெரியாது. 14–ம் தேதி மாதம் ஞாபகமில்லை 2022–ஆம் ஆண்டு மாலை 03.30 மணிக்கு நான் கொற்கையில் உள்ள அலுவலகத்தில் பணியில் இருந்தேன். அப்போது சுரேஷ் என்பவர் எனக்கு போன் செய்தார். நான் என்ன விவரம் என்று கேட்டபோது என் அண்ணன் பேத்தி சந்தியா என்பவர் அவரது வீட்டில் தூக்கு மாட்டிக் கொண்டதாக சொன்னார். நான் உடனடியாக வீட்டிற்கு வந்த கேட்டபோது சந்தியாவை 108 ஆம்புலன்ஸ் மூலமாக திருத்துறைப்பூண்டியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக சொன்னார்கள். நான் அங்கு சென்று பார்த்தபோது இறந்து விட்டதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. இறந்து போன சந்தியாவிற்கு நான் உறவுக்காரன் என்றால்

சரிதான். இறந்துபோன சந்தியாவிற்கு யார் காரணம் என்றால் எனக்கு தெரியாது. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.